
உற்சாகத்தையும்
மதிப்பையும் தருவோம்!
குழந்தைகளின் கனவுகளுக்கு
சிறகுகள் தருவோம்!

# குழந்தைத் திருமணம் சமூகத்திற்கான படவிளக்கக் கையேடு

குழந்தைத் திருமணம் என்பது ஒரு முக்கியமான சமூப் பிரச்சினை ஆகும். மேலும் அது குழந்தைகளின் உரிமைகளை மீறுவதாகும். ஏனென்றால், சிறுவர்/சிறுமியரின் உடல் நலம், ஊட்டச்சத்து, வளர்ச்சி, கல்வியில் பெரும்பாதிப்பை ஏற்படுத்துகிறது. அவர்களின் நடத்தையிலும் மாற்றத்தை விளைவிக்கிறது. அத்துடன், குழந்தைப்பருவத்தை குழந்தைகளிடமிருந்து பறித்து விடுகிறது.

தகுந்த வயதிற்கு முன்பே நமது குழந்தைகளுக்கு, குறிப்பாக பெண்களுக்கு, திருமணம் நடத்துவதால் அவர்கள் பள்ளிப்படிப்பை இடையிலேயே விட்டு விட வேண்டியது உள்ளது. அவர்களுக்கு கிடைக்கும் வாய்ப்புகளைக் குறைத்து விடுகிறோம் சிறிய வயதிலேயே வீட்டுப் பொறுப்புகளை அவர்கள் மீது சுமத்தி விடுகிறோம். இதனால் சமூக வளர்ச்சியிலும் பாதிப்பு ஏற்படுகிறது. நமது குழந்தைகளை பள்ளிக்கு அனுப்புவோம் என்கிற உறுதிமொழியை நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். அவர்களுக்கு முழுமையான கல்வியறிவு அளிக்கவும் அவர்களது திறமைகளை வளர்க்கவும் நாம் உறுதி எடுத்துக் கொள்வோம். வாழ்க்கைக்குத் தேவையான திறமைகளை வளர்க்க உதவுவோம். உடலாலும், மனதாலும் அவர்கள் முழுமையாகத் தயாரானப் பிறகே அவர்களுக்குத் திருமணம் செய்வோம் என்று உறுதி ஏற்போம்.

பெற்றோர்கள், பாதுகாப்பாளர்கள், சமூக உறுப்பினர்கள் ஆகியோருடன் பேசுவதற்கு இப்பட விளக்கக் கையேட்டை பயன்படுத்தலாம். இக்கையேடு கதை வடிவத்தில் உள்ளது. மேலும் இது சட்டபூர்வமான திருமண வயதை மதித்து குழந்தைத் திருமணத்தினால் ஏற்படும் எதிர் விளைவுகளை மனதில் கொண்டு, கல்வி ஆரோக்கியமான வாழ்க்கை ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்பதை விளக்குகிறது.

குழந்தைத் திருமணத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக தில்லியில் உள்ள நியூகான்செப்ட் சென்டர் பார் டெவலப்மெண்ட் கம்யூனிக்கேஷன் (New Concept Centre for Development Communication - NCCDC) அமைப்பு உருவாக்கிய பட விளக்கக் கையேட்டை சென்னையில் உள்ள மாநில கருவூல மையம் மறுஆக்கம் செய்துள்ளது. வளரிளம் பருவத்தினரின் தன்னுரிமை மேம்பாடு மற்றும் குழந்தைத் திருமணத்தை முடிவுக்குக் கொண்டு வரும் திட்டத்தைத் தமிழகத்தில் செயல்படுத்தும் முயற்சியில் துணை நிற்கும் தமிழக அரசின் சமூக நலத் துறை யுனிசெஃப் அமைப்பு ஆகியவை தரும் ஒத்துழைப்பையும் நன்றியுடன் நினைவு கொள்கிறோம்.

# படவிளக்கக் கையேடு:பயன்படுத்தும் முறை

பங்கேற்பாளர்களுடன் சுவாரசியமாகவும் பயனுள்ள முறையிலும் பேசுவதற்கு படவிளக்கக் கையேட்டை பயன்படுத்தலாம். குழந்தைத் திருமணத்தை பற்றி கேள்விகள் கேட்பதற்கு பங்கேற்பாளர்களை இது தூண்டுகிறது. அவர்களுடைய சந்தேகங்களைத் தீர்த்து வைக்கிறது மற்றும் அவர்களுடைய அறிவை வளர்க்கிறது. இப்பட விளக்கக் கையேட்டை சுலபமாக எங்கு வேண்டுமானாலும் எடுத்துச் செல்லலாம்.

**இந்தக் கையேட்டைப் பயன்படுத்தும் போது கீழ்க்கண்ட கருத்துகளை நினைவில் கொள்ளவேண்டும்:**

- முக்கியமானச் செய்திகளை வலியுறுத்த வேண்டும்.
- குழுவினரின் அறிவை வளர்க்க வேண்டும்.
- பங்கேற்பாளர்களின் கவனத்தையும் பங்களிப்பையும் அதிகரிக்க வேண்டும்.
- இக்கையேட்டைப் பயன்படுத்தி செய்திகளைச் சொல்வதற்கான காலத்தைத் திட்டமிடவும்.
- குழுவில் 7 அல்லது 8 நபர்களுக்கு மேல் இருக்கக் கூடாது
- ஒரு அறையிலோ அல்லது மற்ற இடத்திலோ, எல்லோரும் உட்காருவதற்கு எங்கு இடம் உண்டோ, அங்கு இதைப் பயன்படுத்தலாம்.

**படவிளக்கக் கையேட்டை எப்படி பயன்படுத்துவது? :**

- பங்கேற்பாளர்களை அரை வட்ட வடிவமாக உட்கார வைத்து பயிற்றுநருடன் அதில் உட்கார்ந்து கொள்ளவும்.
- படவிளக்கக் கையேட்டைப் பயன்படுத்துவதற்கு முன்பாக அவர்களிடம் பொதுவான செய்திகளைக் கூறி கலந்துரையாடவும்.
- கலந்துரையாடிக் கொண்டிருக்கும் போதே, படவிளக்கக் கையேட்டை எல்லோருக்கும் வரைபடங்கள் தெரியும் வகையில் தூக்கிப் பிடிக்க வேண்டும்.
- வரைபடத்தைக் காண்பிக்கும்போதோ, பக்கங்களைத் திருப்பும்போதோ, உங்களுடைய கை, வரைபடங்களை மறைக்கக் கூடாது.
- படவிளக்கக் கையேட்டைக் கையில் பிடிக்கும்போது வரைபடங்கள் பங்கேற்பாளர்களை நோக்கியும், செய்திகளும் கதையும் உங்கள் பக்கத்தை நோக்கியும் இருக்க வேண்டும். செய்திகளையும் கதையையும் வரிக்கு வரி படிக்காமல் அவர்களுடன் உரையாடும் முறையைக் கையாளவும். பங்கேற்பாளர்களுக்கு நீங்கள் ஒரு படக்கதையைச் சொல்வதுபோல தோன்ற வேண்டும்.
- ஒவ்வொரு அட்டைக்கும் சமமான நேரத்தை ஒதுக்க வேண்டும். அனைத்துச் செய்திகளையும் கலந்துரையாடுவதற்குப் போதுமான நேரத்தைக் கொடுக்க வேண்டும் என்பதை மனதில் கொள்ள வேண்டும்.
- பங்கேற்பாளர்களைக் கலந்துரையாடலில் பங்கெடுக்க வைப்பதற்கு கேள்விகள் கேட்டு உரையாட இந்தப்படத்தில் என்ன புரிந்துகொள்கிறீர்கள் என்று கேட்டு உரையாட வேண்டும். ஒவ்வொரு பக்கத்திலும் விவாதத்திற்கான கருத்துகள் கொடுக்கப்பட்டுள்ளன. கலந்துரையாடுவதற்கு ஏற்ற வகையில் இக்கருத்துகள் அமைந்திருக்கும்.
- இக்கதையைக் கூறி கலந்துரையாடிய பின், முக்கியமான செய்திகளை மீண்டும் ஒரு முறை நினைவு கூறவேண்டும்.
- இப்படவிளக்கக் கையேட்டை விளக்கிக் கலந்துரைபயாடலுக்குப் பிறகு பங்கேற்பாளர்களுக்கு நன்றியைக் கூறி உரையாடலை முடித்துக் கொள்ள வேண்டும்.



## உரையாடுவதற்கான செய்திகள்

- அனிதாவின் படிப்பு தொடர்வதற்கு சுமித்ராவும் தனராஜும் என்ன முயற்சிகள் எடுக்க வேண்டும்?
- உங்களுடைய வீட்டில் குழந்தைகளின் படிப்பு விஷயத்தில் யார் முடிவெடுக்கிறார்கள்?

## முக்கியமான செய்தி

- பிள்ளையோ பெண்ணோ, இருவருக்கும் சமமான கல்வி வாய்ப்பு கிடைக்க வேண்டும்.
- குழந்தைகளின் வளர்ச்சியில், தாய், தந்தை இருவரும் பங்கெடுக்க வேண்டும்.

அனிதாவும் சுந்தரும் பள்ளியிலிருந்து சந்தோஷமாக வீடு திரும்பினர். தனராஜ் மற்றும் சுமித்ராவுடன் பெற்றோர் பேசுகிறார்கள்:

**சுமித்ரா** : அடே! அனிதா! சுந்தர்! பள்ளியிலிருந்து இவ்வளவு சீக்கிரம் வந்து விட்டீர்களே!


**அனிதா** : ஆமாம், அம்மா! எனக்கும் சுந்தர் அண்ணாவிற்கும் இன்று அரையாண்டுத் தேர்வு முடிவுகள் வந்துவிட்டன.

**தனராஜ்** : நல்லது, நாங்களும் உங்களுடைய தேர்வு முடிவுகளைத் தெரிந்து கொள்ளலாமா?

**அனிதா** : அப்பா! நாங்கள் இருவரும் தேர்வடைந்து விட்டோம்.

**தனராஜ்** : நல்லது, இது மிகவும் மகிழ்ச்சியான செய்தி.

**சுமித்ரா** : இதோ இன்னும் சில மாதங்களில் அனிதா 9-ஆம் வகுப்புக்கு சென்று விடுவாள். எந்த பள்ளியில் இவளைச் சேர்ப்பது என்பது தான் என் கவலை.





*தனராஜும் சுமித்ராவும் வீட்டில் பேசிக்கொண்டிருக்கிறார்கள்:*

**சுமித்ரா** : இன்று காலையிலிருந்து ஏன் மௌனமாக இருக்கிறீர்கள்?

**தனராஜ்** : ஒன்றுமில்லை, அனிதாவை பள்ளியில் சேர்ப்பதைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறேன்.

**சுமித்ரா** : ஆமாம், அனிதாவை சேர்ப்பதற்கு நமது கிராமத்தில் பள்ளி கிடையாது. பள்ளி இருந்தாலும் அது தொலைவில் உள்ளது.

**தனராஜ்** : இதைப்பற்றிதான் யோசனை. படிப்பிற்காக அனிதாவை தொலை தூரம் அனுப்புவது நல்லதா?

**சுமித்ரா** : என்ன செய்வது?. இதனால்தான் கிராமத்தில் நிறையக் குழந்தைகள் தங்களுடைய கல்வியை முடிப்பதில்லை. பெற்றோர்களும் தொலை தூரம் படிப்பிற்காக குழந்தைகளை அனுப்புவதைப் பற்றி யோசிக்கிறார்கள்.

**தனராஜ்** : நீ, சொல்வது சரிதான், ஆனால், நான் அனிதாவுடைய கல்வியை நிறுத்த விரும்பவில்லை, ஏனென்றால் -

- எழுத, படிக்கத் தெரிந்தால்தான் அவளுடைய அறிவு வளரும்.
- தனது சொந்தக் காலில் நிற்க முடியும்.
- தனது குடும்பத்தினருக்கும் பிள்ளைகளுக்கும் செய்ய வேண்டிய பொறுப்பை உணருவாள்.
- சமுதாயத்தில் ஒரு சிறந்த குடிமகளாக பங்காற்ற அவளால் முடியும்.

## உரையாடுவதற்கான செய்திகள்

- சுமித்ராவும் தனராஜும் குறிப்பிட்ட கல்விக்கான தடைகளைப் பற்றி உங்கள் கருத்து என்ன?
- வேலை வாங்குவதற்குத் தவிர கல்விக்கு வேறு பயன்கள் உண்டா?

## முக்கியமான செய்தி

குடும்பமும் சமுதாயமும் ஆண், பெண் குழந்தைகள் இருவரும் தொடர்ந்து பள்ளி செல்வதற்கு முழு முயற்சிகள் எடுக்க வேண்டும்.





*சுந்தரும் அனிதாவும் பள்ளிக்கூடம் செல்கிறார்கள்...*

**சுந்தர், அனிதா** : அப்பா! அம்மா! நாங்கள் பள்ளிக்கூடம் செல்கிறோம்.

**சுமித்ரா** : சிறிது பொறுங்கள், உங்களுடைய விளையாட்டுப் போட்டியை பார்ப்பதற்கு அப்பாவும் கூட வருகிறார்.

**லோகேஷ்** : பிரமாதம்! சீக்கிரம் வாருங்கள், பள்ளிக்கு நேரமாகிறது.

**தனராஜ்** : நல்லது. சுமித்ரா நான் கிளம்புகிறேன். பள்ளியில் விளையாட்டுப் போட்டியை பார்த்துவிட்டு அங்கிருந்தே அலுவலகம் செல்கிறேன்.

**சுமித்ரா** : நல்லது, லோகேஷ் ! அனிதா ! நீங்கள் இருவரும் விளையாட்டு போட்டியில் வெற்றி பெற முயற்சி செய்யவேண்டும்.

**சுந்தர், அனிதா** : நிச்சயமாக அம்மா, நிச்சயமாக.

## உரையாடுவதற்கான செய்திகள்

ஆண்கள் பெண்களின் உடல் மற்றும் மன வளர்ச்சிக்குப் படிப்பைத் தவிர வேறு எது தேவை?

## முக்கியமான செய்தி

ஆண்கள் பெண்களின் வளர்ச்சிக்கு கல்வியை தவிர விளையாட்டு, கலை, சமூகச் செயல்பாடுகள் போன்றவற்றிலும் ஈடுபடவேண்டும்





## உரையாடுவதற்கான செய்திகள்

சுமித்ராவும் தனராஜும் அனிதாவின் வருங்காலம் குறித்து எந்த விஷயங்களில் மேல் கவனம் செலுத்த வேண்டும்?

## முக்கியமானச் செய்தி

ஆண், பெண் குழந்தைகளின் திருமண விஷயத்தில் அவசரப்படாமல் அவர்களுடைய வளர்ச்சியிலும் கல்வியிலும் கவனம் செலுத்த வேண்டும்.

*சுமித்ரா தனது அண்ணன் ராஜேந்திரனுடன் பேசிக்கொண்டிருக்கிறார்:*

**சுமித்ரா** : வாருங்கள், அண்ணா ! வாருங்கள். எங்களுடைய வீட்டிற்கு வழி மறந்து விட்டதா?

**ராஜேந்திரன்** : இல்லேம்மா, ஒரே அலைச்சல். மாப்பிள்ளை, பிள்ளைகள் சுந்தர், அனிதா எப்படி இருக்கிறார்கள்?

**சுமித்ரா** : நல்லாயிருக்கங்க. அண்ணே, வீட்டில் அண்ணி பிள்ளைங்க நல்லாயிருக்காங்களா?

**ராஜேந்திரன்** : சுமித்ரா, உன்னுடன் ஒரு முக்கியமான விஷயம் பேச வேண்டியிருந்தது, அதனால் உன்னுடைய வீட்டிலேயே பேசலாம் என்று நேரே இங்கே வந்தேன்.


**சுமித்ரா** : அப்படிப்பட்ட முக்கியமான விஷயம் என்ன அண்ணா?

**ராஜேந்திரன்** : சுமித்ரா, நான் அனிதாவிற்காக ஒரு நல்ல வரன் பார்த்திருக்கிறேன், அந்த வீட்டில் ஒரு பையனும் ஒரு சிறுமியும் உள்ளார்கள். அங்கே நாம் அனிதாவின் திருமணத்தை பற்றி பேசலாம். பையன் எல்லா விதத்திலும் அனிதாவுக்கு பொருத்தம்.. இதைத் தவிர அந்த சிறுமியும் சுந்தருக்கும் பொருத்தமாக இருப்பாள். ஒரே குடும்பத்தில் இரண்டு உறவுகள் ஏற்பட்டால் நமக்கு நிறைய ஆதாயம்.

**சுமித்ரா** : அனிதாவுக்கு வரனா? என்ன அண்ணா சொல்லுகிறீர்கள், அனிதா படித்துக் கொண்டிருக்கிறாள். திருமண வயதும் ஆகவில்லை.

**ராஜேந்திரன்** : அனிதா தொடர்ந்து படித்துக் கொண்டேயிருக்கலாம். ஆனால், இது போன்ற நல்ல வரன் மீண்டும் அமையாது. உனது கணவருடன் பேசி ஒரு முறை பையனைப் பார்த்து விட்டு வா. நானும் தானே போன வருடம் என்னுடைய பெண்களுக்கு திருமணத்தை முடித்தேன். வயது ஏறிக்கொண்டேயிருந்தாலும் அதிகப் படிப்பு இருந்தாலும் அதற்கு ஏற்ற மாதிரி நம்மால் வரனும் தேட முடியாது.

ராஜேந்திரனுடைய பேச்சைக் கேட்டு சுமித்ரா யோசனையில் ஆழ்ந்து விடுகிறாள்...





*சுமித்ரா கவலையுடன் தன் அண்ணன் கூறியதை தனராஜூடம் கூறிக்கொண்டிருக்கிறாள்:*

**சுமித்ரா** : ராஜேந்திரன் அண்ணா வந்திருந்தார், உங்களுக்காக நிறைய நேரம் காத்திருந்த பிறகு, உங்களுடைய சகோதரரிடம் பேசிவிட்டு கிளம்பிவிட்டார்.

**தனராஜ்** : அப்படியா. ராஜேந்திரன் மச்சான் என்ன சொன்னார்?

**சுமித்ரா** : அனிதாவுக்காக ஏதோ வரனை பற்றி பேசினார். அது ஒரு நல்ல குடும்பம், அங்கே நம் இரண்டு பிள்ளைகளுக்கும் வரன் கிடைத்து விடும் என்று சொல்கிறார்.

**தனராஜ்** : மச்சான் சொல்வது சரி தான். அனிதாவுக்கு இன்றைக்கு இல்லாவிட்டாலும் நாளைக்கு திருமணம் செய்துதான் ஆகவேண்டும், காலம் கடந்து போச்சுனா ஒவ்வொருத்தருக்கா பதில் சொல்லிட்டு இருக்கனும் அனிதாவுக்கு வீட்டு வேலையைக் கற்றுக் கொடுத்து கல்யாணம் பண்ணி வச்சிடலாம்னு சில நேரம் எனக்கும் தோணும். வயசு அதிகமானாலும் படிப்பு அதிகமானாலும் அதற்கு மேலே வரதட்சணை கொடுக்க வேண்டி இருக்கும்.

**சுமித்ரா** : வரதட்சணை விஷயம் சரிதான், ஆனால் உடனடியாக அனிதா கல்யாணம் சம்பந்தமாக முடிவு எடுப்பது சரியா? தவறா?ன் யோசிக்க வேண்டியிருக்கு.

**தனராஜ்** : எனக்கும் அந்தயோசனை தான் அவசரப்படக்கூடாது என்று நினைக்கிறேன், இந்த முடிவும் அனிதாவுக்கு ஏற்றதல்ல என்றும் தெரிகிறது. நமக்கு எவ்வளவு வசதி இருக்கிறதோ அதற்கேற்றாற் போலதான் காலெடுத்து வைக்க முடியும். இதை பற்றி நான் ராமு அண்ணாவிடமும் பேசிவிட்டு வருகிறேன்.

**சுமித்ரா** : "ஹும் ..

## உரையாடுவதற்கான செய்திகள்

சுமித்ராவும் தனராஜும் எப்படிப்பட்ட முடிவை எடுக்க வேண்டும்?

## முக்கியமான செய்திகள்

எப்போதுமே, அவசரப்பட்டு எடுக்கப்படும் முடிவுகளினால் பாதிப்பு ஏற்படக்கூடும்.





*தனராஜ் தனது சகோதரர் ராமு வீட்டிற்குச் செல்கிறார். அங்கு ராமு ஊர் பஞ்சாயத்துத் தலைவரோடு பேசிக் கொண்டிருக்கிறார்:*

**தனராஜ்** : அண்ணா! அண்ணா!

**ராமு** : வா, தனராஜ், வா

**தனராஜ்** : குடும்ப விஷயம். உங்ககிட்ட கலந்துக்கலாம்னு வந்தேன் அண்ணா!

**ராமு** : சரி,சரி நல்லாதாப் போச்சு நம்ப பஞ்சாயத்து தலைவரும் இருக்கிறரே!சொல்லு!

**தனராஜ்** : அண்ணா! அனிதாவுடைய திருமண விஷயமாக ராஜேந்திரன் மச்சான் கூறியதைப்பற்றி எனக்கு குழப்பமாக இருக்கிறது.

**ராமு** : எதற்கு குழப்பம்? தனராஜ்! இது மிகவும் நல்ல விஷயமாயிற்றே ! எவ்வளவு நாள்தான் அனிதாவை வீட்டில் வைத்திருப்பாய்? வயசுக்கு வந்தே இரண்டு வருஷமாச்சே? சொந்தங்கள் எல்லாம் அனிதாவின் கல்யாணத்தை எதிர்பார்க்கிறார்களே? பெண்களுகு புகுந்த வீடுதானே சொந்த வீடு உலகமும் கெட்டுக்கிடக்குது. ஏதேனும் தவறு ஏற்பட்டுவிடக்கூடாது!

**தனராஜ்** : ஆனால், அண்ணா ! உலகம் மாறிக்கொண்டிருக்கிறது. இன்று பெண் குழந்தைகளுக்கும் ஆண் குழந்தைகளுக்குச் சமமான உரிமை தரப்படுகிறது, அவர்கள் கல்வியை முடிப்பதும் முக்கியம்.

**ராமு** : ஆனால், தனராஜ் ! இது போன்ற வரன் அடிக்கடி நமக்கு கிடைக்காது, மேலும், அனிதாவைப் படிக்க வைப்பதில் நமக்கு என்ன லாபம்? கடைசியில் அவளா உனக்குச் சம்பாதித்துப் போடப்போகிறாள்?. மேலும், அவளைப் படிக்க வைக்கும் முயற்சியில் அவளுடைய வயதும் அதிகமாகி மேலும் அதிகமான வரதட்சணை தர வேண்டி வரும். அனிதாவுக்கும் சுந்தருக்கும் ஒரே வீட்டில் திருமண சம்பந்தம் கிடைத்துவிட்டால், வரதட்சணை பிரச்சினையிலுருந்து நீ தப்பித்துக் கொள்ளலாம்.

**பஞ்சாயத்து தலைவர்** : ராமு சொல்வது சரிதான். இந்த வரன் நம்முடைய ஜாதியைச் சேர்ந்த நல்ல குடும்பம் தான். அதனால் வரும் தை மாதத்திற்கு பிறகு திருமணத்தை நடத்திவிட வேண்டியதுதான்.


**தனராஜ்** : ஆனால், எனக்கு இவ்வளவு சிறிய வயதில் அனிதாவின் திருமணத்தை நடத்துவது சரியா எனத் தெரியவில்லை. மனது பாரமாகவே இருக்கிறது அண்ணா!

## உரையாடுவதற்கான செய்திகள்

ராமு தந்த யோசனையைப் பற்றி உங்களுடைய கருத்து என்ன?

## முக்கியமான செய்தி

குழந்தைகளின் வருங்காலத்தைப் பாதிக்கும் வகையில் நாம் குடும்பத்தினரின் சமுதாயத்தின் கட்டாயத்திற்கு அடிபணியக்கூடாது.





உரையாடுவதற்கான செய்திகள்

பெண்கள் விளையாட்டுத்துறையில் வருங்காலத்தை அமைப்பதைப்பற்றி உங்களுடைய அபிப்பிராயம் என்ன?

முக்கியமான செய்தி

ஆண், பெண் குழந்தைகள் இருவருக்கும் சமமான வாய்ப்புகள் கிடைக்க வேண்டும்.

*(அனிதாவும் சுந்தரும் பள்ளிக்கூடத்திலிருந்து திரும்புகிறார்கள்:)*

**சுந்தர்** : அப்பா! இன்றைக்கு பள்ளிக்கூடத்திற்கு சர்வதேசப் போட்டிகளில் வென்ற தமிழ்நாட்டு விளையாட்டு வீரர்கள் வந்திருந்தார்கள். அவர்கள் மாணவர்களுடன் விளையாட்டைப் பற்றி பேசியது எனக்கு மிகவும் பிடித்திருந்தது.


**அனிதா** : அவர்களில் பலரைப் பற்றி நான் தெரிந்து கொண்டேன். அப்பா! வருங்காலத்தில் விளையாட்டு வீராங்கனையாக வேண்டும் என நான் முடிவு செய்து விட்டேன். பள்ளியில் நடக்கும் விளையாட்டு போட்டிகளில் நான் எப்போதுமே முன்னணியில் தான் உள்ளேன், அதனால், நான் வளர்ந்த பிறகு விளையாட்டு ஆசிரியையாக முடிவு செய்துவிட்டேன்.

**தன்ராஜ்** : அனிதா! நீ என்ன சொல்கிறாய்? இந்த வயதில் விளையாட்டில் பங்கெடுக்கலாம். ஆனால், பெரியவளான பிறகு விளையாட்டில் ஈடுபட்டால் சமுதாயத்தில் என்ன சொல்வார்கள்? உன்னை யார் திருமணம் செய்து கொள்ள சம்மதிப்பார்கள்? எப்போதாவது இதை பற்றி நீ நினைத்திருக்கிறாயா?

இதைக் கேட்டு அனிதாவின் முகம் சுருங்கி விட்டது

**சுந்தர்** : ஆனால், அப்பா! பள்ளிக்கு வந்திருந்த விளையாட்டு வீரர்களில் பெண்களும் இருந்தார்கள். இன்றைக்கு எல்லா துறைகளிலும் பெண்கள் முன்னேறி வரும்போது என்னுடைய அக்காவினால் மட்டும் ஏன் முடியாது?

**சுமித்ரா** : சுந்தர் சொல்வது சரிதானே! ஏன் இப்படி கோபப்படுகிறீர்கள்? இப்போதுதான் இவர்கள் பள்ளியிலிருந்து வந்திருக்கிறார்கள், உணவு உண்ணட்டும். அதுவரை நாம் சந்தைக்குப் போய்விட்டு வரலாம்.





## உரையாடுவதற்கான செய்திகள்

கிராம சுகாதாரப்பணியளா் ANM அக்கா தன்ராஜுக்கும் சுமித்ராவுக்கும் சரியான ஆலோசனை தந்தாரா?

## முக்கியமான செய்தி

ஆணாகட்டும் பெண்ணாகட்டும் இருவருக்கும் அவர்களுடைய விருப்பத்திற்கு ஏற்றார் போல வருங்காலத்தை அமைத்துக் கொள்வதற்கு ஊக்கத்தைத் தரவேண்டும்

*(தனராஜும் சுமித்ராவும் சந்தைக்கு செல்கிறார்கள் அங்கு கிராம சுகாதாரப் பணியாளரைச் (நர்சம்மா) (ANSL) நர்சம்மாவைச் சந்திக்கிறார்கள்...)*

**தனராஜ், சுமித்ரா** : நர்சம்மா-! வணக்கம்!

**நர்ஸ்** : வணக்கம்! தனராஜ்! சுமித்ரா! நீங்கள் இருவரும் நலம்தானே? அனிதாவும் சுந்தரும் நலம்தானா?

**சுமித்ரா** : அக்கா! எல்லோரும் சுகம். அவர்கள் இருவரும் வீட்டில்தான் இருக்கிறார்கள். சில சாமான்கள் வாங்க வேண்டி இருந்ததால். சந்தைக்கு வந்தோம்.

**நர்ஸ்** : எனது கணவர் அனிதாவின் ஸ்கூல் டீச்சர் சார், அனிதாவைப் பற்றி புகழாத நாளே கிடையாது.

**சுமித்ரா** : அப்படியா? எதைப் பற்றி புகழ்கிறார் அக்கா?

**நர்ஸ்** : நேற்று கூட பேசினோம். ஏதோ பேச்சு வாக்கில் அனிதாவின் பெயர் அடிபட்டது. அப்போது டீச்சர் சார், அனிதா படிப்பில் மட்டுமல்ல விளையாட்டு போட்டிகளிலும் முதல் பரிசு பெறுகிறாள். இப்படியே அனிதா முயற்சி செய்தால் விளையாட்டிலும் முன்னணியில் வருவாள் என்றார்.

**தனராஜ்** : அதில் சந்தோசம்தான், ஆனாலும்...

**நர்ஸ்** : தனராஜ் என்ன தயக்கம்.? உங்களுடைய பெண் முன்னேறி வருவதில் உங்களுக்கு சந்தோசம் இல்லையா?

**தனராஜ்** : நிச்சயமாக சந்தோசமாக இருக்கிறோம், ஆனால் அனிதாவின் வருங்காலத்தை நினைத்து சிறிது குழப்பம், அதனால், மிகவும் கவலையாக உள்ளோம்.





*(நர்ஸ் அக்கா (ANM) தனராஜுடம் கல்வியின் முக்கியத்துவத்தைப் பற்றி கூறுகிறார்:)*

**தனராஜ்** : இப்போது பிரச்சினை என்னவென்றால், சுமித்ராவின் சகோதரர் அனிதாவிற்கு சீக்கிரமே திருமணத்தை முடித்துவிட வேண்டும் என்று கட்டாயப்படுத்துகிறார். ஆனால், அனிதா மேலும், படித்து விளையாட்டு ஆசிரியையாக விரும்புகிறாள், நாங்க இருவரும் அவள் படிப்பைத் தொடரவேண்டும் என்றே நினைக்கிறோம், அவளுடைய கனவு நனவாக வேண்டும் என்று விரும்புகிறோம். ஆனால், சகோதரரின் விருப்பத்திற்கு பணிவதா? அல்லது பெண்ணின் கனவை நனவாக்குவதா? தெரியவில்லை.

**நர்ஸ்அக்கா** : நீங்கள் இருவரும் அனிதாவின் வருங்காலத்தை பற்றி நினைப்பது மிகவும் முக்கியம். இந்த வயதில் அவளுக்கு திருமணம் செய்வது கெடுதல். ஏனென்றால், அவளுடைய கனவு தகர்ந்து விடும், மேலும், படிப்பை முடித்த பிறகு சரியான வயதில் திருமணம் செய்யவேண்டும். அப்போதுதான், ஆண், பெண் இருவரும் தங்களுடைய பொறுப்பையும் பங்கையும் உணர்ந்து செயல்படுவார்கள். தங்களுடைய கனவுகளையும் அவர்கள் நிறைவேற்றிக் கொள்ள முடியும்.

நம்முடைய அனிதா விளையாட்டு ஆசிரியை ஆவதில் என்ன தவறு? ஆண்கள் எல்லாம் செய்ய முடியும்போது பெண்களால் மட்டும் ஏன் முடியாது? ஆண், பெண் இருவரையும் நாம் சமமாகக் கருதவேண்டும். கல்வி அவர்களுடைய வாழ்க்கைக்கு மிகவும் தேவை. கல்வி அனைத்து குழந்தைகளின் உரிமையாகும். ஒவ்வொரு குழந்தைக்கும் கல்வி பெற உரிமை உண்டு. அவர்களுக்கு கல்வி பெறும் உரிமையை அளிப்பது பெற்றோர்களின் கடமையாகும்.

நமது குழந்தைகள் படித்தால்தானே தங்களுடைய கனவை நிறைவேற்றிக் கொள்ள முடியும், இந்த உலகில் தங்களுக்கு என்று ஒரு இடத்தை பிடிக்க முடியும். சிறிய வயதில் அவர்களுக்குத் திருமணம் நடந்துவிட்டால், உடலாலும் மனதாலும் அவர்கள் பாதிக்கப்படுவார்கள். இப்போது நீங்களே சொல்லுங்கள், அனிதாவிற்கு கல்வியைத் தந்து அவளுடைய கனவைப் பூர்த்தி செய்வீர்களா ? அல்லது மிகக் குறைந்த வயதில் திருமணத்தை செய்துவைத்து அவளுடைய கனவை உடைப்பீர்களா?

உனக்குத் தான் தெரியுமே, நமது கிராமத்தைச் சேர்ந்த மருதன் மகளுக்கு நேர்ந்த கதி. சிறு வயதான மருதன் மகளுக்குத் திருமணம் வேண்டாம், சரியான ஊட்டச்சத்துக் கிடைக்காது என்று எவ்வளவோ கூறியும் கேட்காமல் திருமணத்தை நடத்தி அவளும் தாயாகி விட்டாள். சிறு வயதில் கர்ப்பமுற்றதால், உடல் உறுப்புகள் முழு வளர்ச்சி அடையாததால் பிரசவ சமயத்தில் மிகவும் கஷ்டப்பட்டாள். அவள் உயிரைக் காப்பாற்ற எவ்வளவு போராட வேண்டியிருந்தது என்று தான் உங்க எல்லோருக்கும் தெரியுமே.

**தனராஜ்** : நன்றாக தெரியும். ஆனால் இந்த நல்ல வரனை விட்டால் பிறகு இது போன்ற வரன் கிடைக்குமா என்பது சந்தேகம்.

**நர்ஸ் அக்கா** : தனராஜ், இப்போது நிலைமை மாறிக்கொண்டிருக்கிறது, நிலைமைக்கு ஏற்றார் போல் மக்களின் எண்ணமும் மாறிக்கொண்டிருக்கிறது. உனக்கு ஞாபகம் இருக்கலாம், என்னைப் பற்றி கிராமத்தில் பலர் தவறாக பேசினார்கள், இப்போது பார் எனக்கு இருக்கும் மரியாதையை.

தனராஜ் சிந்தித்தார்.

## உரையாடுவதற்கான செய்திகள்

- குறைந்த வயதில் குழந்தை திருமணம் நடத்தினால் அதனால் ஏற்படும் மோசமான விளைவுகள் என்ன?
- உங்களுடைய வீட்டு வேலைகளை எவ்வாறு பங்கிடுகிறீர்கள்?

## முக்கியமான செய்தி

- பெற்றோர்கள் இருவருமே சமுதாயத்தின் நிர்பந்தத்தினால் குழந்தைகளின் வருங்காலத்தைப் பாழடிக்கக் கூடாது
- ஆண் பெண் இருவருக்குமிடையில் வீட்டு வேலை மற்றும் வெளி வேலைகளைப் பங்கிட வேண்டும்
- குறைந்த வயதில் திருமணம் செய்வதால், ஆண், பெண் இருவருக்கும் உடலாலும் மனதாலும் பாதிப்பு ஏற்படும்.





**தனராஜ்** : எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது, நர்ஸ் வீட்டுக்கு வெளியே சுற்றிக்கொண்டிருப்பாள், ஆசிரியராக உள்ள நர்சின் கணவன் தான் வீட்டு வேலைகளைச் செய்வார் என்று கிராமத்தில் எலலோரும் நீங்கள் வேலைக்கு வந்த புதிதில் பேசுவார்கள்.

**சுமித்ரா** : ஆமாம். பக்கத்து வீட்டு ராதா மாமி கூட, வீட்டில் விருந்தினர்கள் வந்து விட்டால், டீச்சர் சார் கூட சமையலில் உதவி செய்வார் என்று கூறி ஆச்சரியப்படுவார்கள்.

**தனராஜ்** : ஆனால், சிறிது காலத்திலேயே உங்களது பணியின் முக்கியத்துவத்தை அறிந்துக் கொண்டு விட்டார்கள். எப்படி வீடு வீடாக சென்று மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துகிறார்: அவர்களுக்கு சுகாதாரத்தைப் பற்றி அறிவுரை கூறுகிறார் நமது கிராமத்திற்காக எவ்வளவு நல்ல வேலை செய்கிறார் என்று எல்லாம் பேசத் தொடங்கினார்கள். வெயில், மழை என்று பாராமல் நமது கிராமத்தில் உள்ள குடும்பங்களுக்காக உழைக்கிறார் என்று பாராட்ட ஆரம்பித்து விட்டார்கள்.

**நர்ஸ் அக்கா** : ஆமாம் தன்ராஜ் நீதான் பார்த்திருக்கிறாயே ஊர்மக்கள் முதலில் ஒரு விஷயத்தைக் கேலி செய்வார்கள், ஆனால் அதன் பயனைத் தெரிந்துக் கொண்டால் பின்னர் ஏற்றுக்கொள்வார்கள்.

**சுமித்ரா** : அக்கா! எங்களுடைய கவலையை நீங்கள் போக்கி விட்டீர்கள். நீங்கள் சொல்வது மிகவும் சரி. நாம் நமது குழந்தைகளின் வருங்காலத்தைப் பற்றி மட்டுமே யோசிக்கவேண்டும். சமுதாயத்தின் கட்டாயத்திற்கு அடிபணிந்து நம் குழந்தைகளின் வாழ்வை அழித்து விடக்கூடாது.

**தனராஜ்** : சுமித்ரா சொல்வது சரிதான், அம்மா ! இப்போது, எங்களுடைய பெண்ணின் படிப்பைப் பாதிக்கும் வகையில் எந்த முடிவையும் எடுக்க மாட்டோம். நீங்கள் தந்த ஆலோசனைக்கு மிகவும் நன்றி. நாங்கள் விடை பெறுகிறோம்.

## உரையாடுவதற்கான செய்திகள்

குழந்தைகளுடைய வருங்காலத்தைப் பற்றி நினைக்கும்போது எந்த விஷயங்களில் நாம் கவனம் செலுத்த வேண்டும்?

## முக்கியமான செய்தி

குழந்தைகளின் கல்வியிலிருந்து, அவர்களுடைய கனவுகள் பூர்த்தியாகும் வரை, முழுமையான ஒத்துழைப்பும் உதவியும் கொடுக்க வேண்டும்.



महिला एवं बाल विकास विभाग

साझा अभियान

बाल विवाह मुक्त राजस्थान

हौसला दें, सम्मान दें,

बच्चों को खुद की पहचान दें!